பக்கங்கள்:-24

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2057 | ஆனி 03 | செவ்வாய்க்கிழமை | 17.06.2025 | அதிர்வு 317

## மொறட்டுவ மீனவர்கள் இருவரைக் காணோம்!



எகொட உயன பகுதியில் மீன்பிடி நடவடிக்கைக்காக கடலுக்குச் சென்று மீள கரைக்குத் திரும்பிய மீன்பிடி 06

### தொகுதிக் கிளை, மாவட்டக் கிளை என்ற பெயரில்

# தமிழரசில் கட்சியின் முடிவை மீறினால் கடும் நடவடிக்கை!

## உள்ளூராட்சி சபை உறுப்பினர்களுக்கு பொதுச் செயலர் சுமந்திரன் எச்சரிக்கை



உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகங்களை ஏற்படுத்துவது தொடர்பாகத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு எடுத்த முடிவுகளையே கட்சியின் தலைவரும் செயலாளரும் நடைமுறைப்படுத்துகின்றார்கள். அவற்றுக்கு மாறாக - முரணாக - கட்சியின் மாவட்டக் கிளை, தொகுதிக் கிளை என்ற பெயரில் உறுப்பினர்கள் செயற்பட்டால் அல்லது நடவடிக்கை எடுத்தால் அவர்களுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை உடனடியாக பாயும்.

- இவ்வாறு எச்சரித்து இருக்கின்றார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன். 06

## சு.கவை சந்திரிகாவிடமே கையளிக்கிறார் மைத்திரி



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பொறுப்பேற்று மீண்டும் கட்டியெழுப்புமாறு திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சு.க.தலைவராக தாம் வகித்த பதவியை எதிர்த்து தொடரப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற்று, கட்சியைப் பொறுப்பேற்று மீண்டும் கட்டியெழுப்புமாறு மைத்திரிபால சிறிசேன, சந்திரிகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் 06




தமிழரசுக் கட்சியில், கட்சியின் தலைமை பீடத்தின் வழிகாட்டலை மீறி உள்ளூராட்சி சபை நிர்வாகிகள் தெரிவுகளின் போது நடந்து கொள்ளும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் தொடர்பில் கடும் ஒழுங்காற்று நடவடிக்கை விரைந்து எடுக்கப்படும் என்று கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் அறிவித்திருக்கிறார்.

காரணத்துடன் கூடிய அறிவிப்புதான் இது.

கட்சிக்குள் ஏற்கனவே கிளிநொச்சியிலும், திருகோணமலையிலும் தனித்தனி சின்ன ஜமீன்கள் உருவாகி இருப்பது குறித்து என் பத்தியில் கோடி காட்டி இருக்கிறேன். ஏற்கனவே கிளிநொச்சி ஜமீனுக்கு தீவுப் பகுதியிலும் சற்று செல்வாக்கும் பிடியும் இருப்பது தெரிந்த விடயம்தான்.

தீவுப் பகுதியில் சில நிர்வாகிகள் சின்ன ஜமீனுடன் சேர்ந்து, சுமந்திரனுக்கு எதிராக காரியமாற்றும் பேரில் சில நடவடிக்கைகளை எடுக்க முற்பட்டிருப்பதால், கடும் ஒழுக்காற்று நடவடிக்கைக்குக் கத்தியைத் தீட்டி வைத்துக் கொண்டு சுமந்திரன் தரப்பு தயாராகி இருப்பதாகத் தெரிகிறது. 06











# நாணய நிதியத்தின் இந்த வசதியே அதனிடம் பெறும் இறுதித் திட்டம்!

## ஜனாதிபதி அநுரகுமார அறிவிப்பு

சர்வதேச நாணய நிதியம் தற்போது இலங்கைக்கு வழங்கும் சர்வதேச விரிவாக்கப்பட்ட நிதி வசதித் திட்டத்தை அதனுடன் மேற்கொள்ளப்படும் இறுதி சர்வதேச நிதிவசதியாக மாற்றுவதே இலங்கையின் நோக்கமாகும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற “இலங்கையின் மீட்புக்கான பாதை: கடன் மற்றும் நிர்வாகம்“ என்ற சர்வதேச மாநாட்டில் முக்கிய உரையை ஆற்றிய அவர், 2028 ஆம் ஆண்டுக்குள் நாட்டின் கடனை சுயாதீனமாக செலுத்த போதுமான வளர்ச்சியுடன் கூடிய நிலையான பொருளாதாரத்தை உருவாக்க இலங்கை விரும்புகிறது என்றார்.

“நான் முன்பு கூறியது போல, இதை சர்வதேச நாணய நிதியத்துன் விரிவாக்கப்பட்ட நிதி வசதியுடன் மேற்கொள்ளப்படும் இறுதித் திட்டமாக மாற்றுவதே எங்கள் நோக்கம். இந்த இலக்கை அடைவோம் என்று நாங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறோம். 2028 ஆம் ஆண்டுக்குள், நமது கடனைச் சுயாதீனமாகச் செலுத்த போதுமான வளர்ச்சியுடன் ஒரு நிலையான பொருளாதாரத்தை உருவாக்க நாங்கள் விரும்புகிறோம். பொருளாதாரம் சரிந்த இடத்தில் ஓர் அரசு அதன் இறையாண்மையைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது. ஒரு நாட்டின் பொருளாதாரம் இடிந்து விழும் போது சுதந்திரத்தைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது. நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், நமது இறையாண்மை மற்றும் சுதந்திரத்தின் ஒரு பகுதியை நாம் ஏற்கனவே இழந்துவிட்டோம். எனவே, இறுதி விளைவு நமது தேசிய இறையாண்மை மற்றும் தன்னம்பிக்கையை மீட்டெடுப்பதாக இருக்க வேண்டும். இதற்கு ஒரு கடினமான மற்றும் அசைக்க முடியாத முயற்சி தேவை. இது நாம் கைவிடக்கூடிய ஒரு பணி அல்ல. நிறைவேற்ற ஒரு தெளிவான குறிக்கோள் உள்ளது. மேலும் அதைத் தொடர்வதில், அரசியல் தலைமையின் அர்ப்பணிப்பு, பொது அதிகாரிகளின் பொறுப்பு மற்றும் மக்களின் ஒத்துழைப்பை நான் எதிர்பார்க்கிறேன்.”

“இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதில் சர்வதேச நாணய நிதியம் வழங்கிய ஆதரவிற்கும், நமது குடிமக்கள் காட்டிய பொறுமை மற்றும் சகிப்புத்தன்மைக்கும், குறிப்பாக இந்த செயல்முறையின் போது அவர்கள் நியாயமற்ற முறையில் பாதிக்கப்பட்டதாக உணர்ந்தால், நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்” – என்று அங்கு அவர் மேலும் கூறினார்.






















# யாழ்ப்பாணத்தில் மீண்டும் எரிபொருள் 'கியூ'!

யாழ் மாவட்டத்தில் உள்ள பல எரி பொருள் நிரப்பு நிலையங்களில் நேற்று மாலை முதல் பொதுமக்கள் நீண்ட வரிசையில் நின்று எரிபொருள் நிரப் பினர்.

ஈரான் – இஸ்ரேல் யுத்தம் வெடித்த மையை அடுத்து, எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாமென கிளம்பிய வதந்தியால் பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத் திருந்தனர்.

எனினும், யழ்ப்பாணத்தில் உள்ள பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலை யங்களில் தாராளமாக எரிபொருள் கையிருப்பு உள்ளதாகத் தெரிய வரு கிறது.





# எரிபொருளுக்கு செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தாதீர் என யாழ் அரச அதிபர் விநயம்




தேவையற்ற செயற்கையான எரிபொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் என யாழ். மாவட்ட மக்களிடம் யாழ்ப் பாண மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அரசாங்க அதிபர் மேலும் தெரிவிக் கையில் –

யாழ்ப்பாணத்தில் இன்றைய தினம் (நேற்று) செயற்கை யான எரிபொருள் தட்டுப்பாட்டு சூழ்நிலை உருவாகியுள்ள–தாக அறியக் கிடைத்துள்ளது.

இன்றைய தினம்(நேற்று) 6,600 லீற்றர் கொள்ளளவு டைய 23 கொள்கலன்களில் 151,800 லீற்றர் பெட்ரோல் யாழ் மாவட்டத்திற்கு எடுத்து வரப்பட்டு. யாழ்ப்பாணத்தில் உள்ள எரிபொருள் நிலையங்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

நாளைய தினமும் (இன்றும்) இதே அளவான எரி பொருள் எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்படும்.

அண்மையில் காங்கேசன்துறையில் திறந்து வைக்கப் பட்ட எரிபொருள் சேமிப்பு நிலையத்திலும் தேவையான எரிபொருள், எடுத்து வரப்பட்டு சேமிப்பதற்குரிய தேவையான சகல ஒழுங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே யாழ் மாவட்ட மக்கள் தேவையற்ற செயற்கை யான எரிபொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுத்து வருவதால், செயற்கை யான தட்டுப்பாட்டை ஏற்படுத்த வேண்டாம் என கேட்டுக் கொள்கிறேன் – என்றார்.








## ஜனாதிபதி - கீதா கோபிநாத் சந்திப்பு;

# பொருளாதார சீர்திருத்த வேலைத் திட்டத்திற்கும் சர்வதேச நாணய நிதியம் தொடர்ச்சியான ஆதரவு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவ பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத் உள்ளிட்ட தூதுக் குழுவினரை நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

இலங்கைக்கு அண்மையில் நிதி நெருக்கடியிலிருந்து மீள, வழிகாட்டிய சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து வழங்கிய ஆதரவிற்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

அமெரிக்கா அண்மையில் விதித்த வரிகளைப் பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 25 வீதம் அமெரிக்காவிற்குச் ஏற்றுமதி செய்யப்படுவதால், அவ்வாறு வரி அதிகரிப்பதால் ஏற்படக்கூடிய தாக்கத்தையும் குறிப்பிட்டார்.

உலகளாவிய நெருக்கடிகள் காரணமாக இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்தும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும், இந்த சவால்களை செயற்திறன் மிக்க வகையில் முகாமைத்துவம் செய்வதற்கும் அவற்றின் தாக்கத்தை குறைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் வர்த்தக உறவு, குறிப்பாக இலங்கையின் 23 வீத ஏற்றுமதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு அனுமதி வழங்கும் புளூ வர்த்தகச் சலுகை பற்றியும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டன.

முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை வலியுறுத்திய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பது பொருளாதாரத்தை மீட்டெடுக்க உதவும் என்றும் தெரிவித்தார்.

தற்போதைய ஆட்சி மக்களைமையமாகக் கொண்டது என்றும், மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என்றும் ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தினார்.

இலங்கையில் தனக்குக் கிடைத்த அமோக வரவேற்புக்கு திருமதி கோபிநாத் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்ததுடன், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் இரண்டிலும் அரசாங்கத்திற்குக் கிடைத்த வலுவான மக்கள் ஆதரவு, அத்தியாவசிய மறுசீரமைப்புகளைச் செயல்படுத்த அரசாங்கத்திற்கு பலமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

கடுமையான நெருக்கடியிலிருந்து நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அடைந்த பொருளாதார வளர்ச்சியையும், மிக அதிக பணவீக்க விகிதத்திலிருந்து பணவீக்க விகிதம் குறைந்ததையும் குறிப்பிட்ட அவர், கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அடைந்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் பாராட்டினார்.

அதேபோன்று, அரச நிர்வாக மறுசீரமைப்புகளில் அரசாங்கம் அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பாராட்டிய அவர், இந்த முயற்சிகளை நிலைநிறுத்தி விரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இலங்கையின் மறுசீரமைப்பு மற்றும் மீட்சி செயல்பாட்டில், சர்வதேச நாணய நிதியம் உறுதியான பங்காளியாக இருக்கும் என்று திருமதி கோபிநாத் உறுதியளித்தார்.

இந்த நிகழ்வில் தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த ஹுலங்கமுவ, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபொன்சு ஆகியோரும் கலந்து கொண்டனர்.





# நீர்ப்பாசன வாய்க்காலினுள் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மீட்பு

## வட்டக்கச்சி பகுதியில் சம்பவம்

கிளிநொச்சி, இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட வட்டக்கச்சி பத்துவீட்டுத் திட்ட குடியிருப்புக்கு அண்மையில் நீர்ப்பாசன வாய்க்காலினுள் இருந்து ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இறந்தவர், கல்மடோ நகர் சம்பு குளம் பகுதியை நிரந்தர பதிவிடமாகவும் ஆறுமுகம் வீதி வட்டக்கட்சியை தற்காலிக வதிவிடமாக கொண்ட 54 வயதுடைய குடும்பஸ்தர் தனபாலசிங்கம் குமாரதாஸ் என தெரியவந்துள்ளது.

இறந்தவரின் சடலம் கிளிநொச்சி பதில் நீதவான் முன்னிலையில் அப்பகுதியில் இருந்து எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இராமநாதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்ளூராட்சி மன்றங்களுக்கான வழிகாட்டல் அரசாங்கம் மீறியுள்ளது என சஜித் குற்றச்சாட்டு



அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களுக்கான வழிகாட்டுதல்களை வெளிப்படையாக மீறியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சி மன்றமொன்றில் எந்தவொரு அரசியல் கட்சியோ அல்லது சுயேச்சைக் குழுவோ அறுதிப் பெரும்பான்மையைப் பெறாத சந்தர்ப்பங்களில், தெரிவுகளை மேற்கொள்வதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் அளவுகோல்களை பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு வெளியிட்டுள்ளது.

இந்த வழிகாட்டுதல்களை உரிய முறையில் பின்பற்றிய போது, பல உள்ளூராட்சி மன்றங்களில் ஐக்கிய மக்கள் சக்தியும் பிற எதிர்க்கட்சிகளும் அதிகாரங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டன.

எனினும், இதனை அவதானித்த தற்போதைய அரசாங்கம், தமது அழுத்தத்தினூடாக, இந்த வழிகாட்டுதல்களை மாற்றியுள்ளது.

இந்தநிலையில், கொழும்பு மாநகர சபையின் 60 உறுப்பினர்கள் கையெழுத்திட்டுத் திறந்த வாக்கெடுப்பைக் கோரிய போது, அந்தக் கோரிக்கை புறக்கணிக்கப்பட்டமை இதற்கு உதாரணமாகும்.

இந்த வழிகாட்டுதல்களை அப்பட்டமாக மீறி, கொழும்பு மாநகர சபை உட்பட ஏராளமான உள்ளூராட்சி மன்றங்களில் நிர்வாக தெரிவுகள் இடம்பெற்றுள்ளதாகவும், இது ஜனநாயக விரோத செயல் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இதற்கு எதிராகத் தேவையான சகல நடவடிக்கைகளையும் எடுப்பதற்குத் தயாராக உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலுக்கு வேலைக்காக இலங்கையர்களை அனுப்பும் செயற்பாடு தற்காலிகமாக நிறுத்தம்

இஸ்ரேலுக்கு வேலை வாய்ப்புக்காக இலங்கையர்களை அனுப்புவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக, வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும், ஈரானுக்கும் இடையில்நிலவும்போர்பதற்றநிலைகாரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டது என நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக இஸ்ரேலுக்குப் பயணம் செய்வது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும், தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அடுத்த சில நாட்களில் நாங்கள் ஒரு முடிவை எடுக்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், சம்பந்தப்பட்ட நாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பு குறித்து தேவையான நேரடி நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருவதாகவும், வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தீவுப் பகுதி பிரகிருதிகளின் எண்ணப்படி சில குழப்பங்களை ஏற்படுத்தி, கட்சியின் தலைமையையும் மீறித் தம்பாட்டில் 'சைக்கிள்', 'சங்கு' கூட்டணியோடு அங்கு கூட்டமைத்துச் செயற்பட்டால், யாழ் மாவட்டத்தில் பிற இடங்களிலும், அந்த போக்கைப் பயன்படுத்தி 'சங்கு', 'சைக்கிள்' கூட்டணிக்கு சில முக்கிய இடங்களில் தவிசாளர் பதவிகளை பெற்றுக் கொடுக்கலாம் என்பது அந்தப் பிரகிருதிகளின் இலக்கு. அதற்காக அவர்கள் திட்டமிட்டுக் காய் நகர்த்திச் செயலாற்றுகின்றனர் எனத் தெரிகின்றது.

தீவுப் பகுதி தொகுதிக் கிளை என்ற பெயரில் ஒரு கூட்டத்தைக் கூட்டி, தீவகத்தில் உள்ள பிரதேச சபைகளுக்கான தவிசாளர் தெரிவுகளின் போது ஈ.பி.டி.பியைக் கைவிட்டு, 'சைக்கிள்', 'சங்கு' கூட்டணியோடு சேர்ந்து செயல்படுவது என்று ஒரு யோசனை திட்டம் தமிழரசுக் கட்சியின் தீவுப் பகுதி பிரகிருதிகள் சிலரால் முன்நகர்த்தப்படுகிறது.

அப்படிச் செய்தால், யாழ் மாவட்டத்தில் பல இடங்களில் 'சைக்கிள்', 'சங்கு' கூட்டணியிடம் தமிழரசு தனது தவிசாளர் பதவிகளைப் பறி கொடுக்குமே என்று அந்தக் கூட்டத்தில் கேட்கப்பட்ட போது, "அதுதானே திட்டம். சுமந்திரனின் தோல்வி அப்போதுதானே வெளிப்படும்!" என்று பதிலளிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்த திசையில் தீவுப் பகுதியின் உள்ளூராட்சி உறுப்பினர்களை வழிநடத்த முயலும் அந்தப் பிரகிருதிகளுக்கு உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் விடயத்தில் கட்சிகளின் செயலாளர்களுக்கு உள்ள அதிகாரங்கள் பற்றிய விவரம் தெரியவில்லைப் போலும்.

கட்சி நிலைப்பாட்டை மீறி செயல்பட்டார் என்ற பெயரில் ஓர் உள்ளூராட்சி உறுப்பினரைக் கட்சியில் இருந்து விலக்கிக் கட்சியின் செயலாளர் மாவட்டத் தெரிவித்தாட்சி அலுவலருக்கு அறிவித்தால், அந்த உள்ளூராட்சி சபை உறுப்பினர் உடனடியாக பதவி இழந்தவர் ஆவார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் விடயத்திலும், மாகாண சபை உறுப்பினர் விவகாரத்திலும் சம்பந்தப்பட்ட உறுப்பினர் தம்மைக் கட்சியிலிருந்து வெளியேற்றியமைக்கு எதிராக வழக்கு தொடர்ந்தால், அந்த வழக்கு முடியும் வரை நாடாளுமன்ற உறுப்பினராக அல்லது மாகாண சபை உறுப்பினராக அவர் இருக்க முடியும். ஆனால் அந்த வசதி - அந்தச் சட்ட ஏற்பாடு - உள்ளூராட்சி உறுப்பினர் விடயத்தில் இல்லை. கட்சி அவரின் உறுப்புரிமையைக் கட்சியிலிருந்து விலக்கினால், அவரின் உள்ளூராட்சி சபை உறுப்பினர் பதவியும் பறிபோகும். அவர் வழக்கு போட்டு வேண்டுமானால் வழக்கின் முடிவில் வென்று மீண்டும் உள்ளூராட்சி உறுப்பினராகலாம். ஆனால் வழக்குப் போட்டமை காரணமாக உறுப்பினர் பதவியை வழக்கு முடியும் வரைத் தக்க வைக்க முடியாது.

ஆகவே, தீவுப் பகுதியிலோ, திருகோணமலையிலோ கட்சியின் செயலாளர் காட்டிய வழிகாட்டுதலுக்கு மாறாகத் தொகுதிகளை முடிவு செய்தது அல்லது மாவட்டக் கிளை முடிவு செய்தது என்று பெயரில் நடவடிக்கைகளை உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் முன்னெடுத்தால், அதைக் காட்டியே அவர்களை கட்சியிலிருந்தும் உள்ளூராட்சி சபை உறுப்பினர் பதவியில் இருந்தும் இலகுவாக - சட்டரீதியாக - வெளியேற்றி விடலாம். இந்த விடயங்களில் விற்பன்னரான ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் கட்சியின் செயலாளராக இருக்கும்போது, அவரோடு உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் விளையாடுவது நிரந்தரமாக தங்கள் பதவியை அவர்கள் இழப்பதற்கே வழி செய்யும் என்பதை முற்கூட்டியே கூறி வைக்க விரும்புகிறேன்.

* * *

சாவகச்சேரி நகர சபைக்குச் சைக்கிள் கட்சியில் உறுப்பினரான ஒருவர் அந்த நகர சபை எல்லைக்குள் வசிப்பவர் அல்லர் என்ற அடிப்படையில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில் சபைக்குச் செல்ல முடியாமல் நீதிமன்றத்தினால் தடை விதிக்கப்பட்டிருக்கின்றார் என்பது தெரிந்த விடயம்தான்.

இதே போன்ற வழக்கு சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் ஒருவருக்கு எதிராகவும் உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது தெரிந்தது.

இதே போன்ற வழக்கு யாழ்ப்பாண மாநகர சபைக்கு தேசிய மக்கள் சக்தி சார்பில் உறுப்பினராகத் தெரிவாகி இருக்கும் கபிலனுக்கு எதிராகவும் தொடுக்கப்படலாம் என்ற பேச்சு உள்ளது.

ஆனால் சைக்கிள் கட்சியின் சார்பில் யாழ் மாநகர சபைக்கு தெரிவான இன்னொருவருக்கு எதிராகவும் இத்தகைய வழக்கு வரும் என்று தெரிகின்றது.

'இலக்கம் 14,பண்டாரிக்குள வீதி, நல்லூர்' என்ற முகவரியை வேட்புனுவில் பதிந்து அவர் தேர்தலில் போட்டியிட்டு இருக்கிறார். ஆனால் அந்த விலாசம் அவருடையது அல்ல. அந்த விலாசதாரருக்கு அவர் யார் என்பதும் தெரியாது. மொத்தத்தில் அந்த விலாசத்துக்கும் அவருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

அவரது வாக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலேயே பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. 2020 பொதுத்தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து அவர் போட்டியிட்டும் இருக்கின்றார்.

இப்போது யாழ் மாநகர சபை எல்லைக்குள் அவர் வசிப்பவராகவும் தெரியவில்லை. இந்த நிலையில் அவர் தான் வாசிக்காத வீடொன்றின் விலாசத்தை வேட்புமனுவில் பதிந்து தேர்தலில் போட்டியிட்டு இருப்பதால் அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்வது குறித்து ஏற்பாடுகள் நடப்பதாகத் தெரிகிறது.

ஏற்கனவே ஒரு தடவை எட்டுப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஈ.பி.டி.பி. சார்பாக யாழ். மாநகர சபைக்கு தெரிவாகி உறுப்பினரான பின்னர் ஈ.பி.டி.பியினால் ஒழுங்காற்று நடவடிக்கைக்கு உள்ளாகி, மாநகர சபை உறுப்பினர் பதவியில் இருந்து அவர் வெளியேற்றப்பட்டவர் என்றும் கூறப்படுகின்றது.

இப்போது சைக்கிள் சின்னத்தில் வந்திருக்கும் அவருக்கு இந்த உறுப்புரிமை எவ்வளவு காலத்துக்கு, அவரின் சைக்கிள் ரியூப்பின் காற்று எப்போது கழற்றப்படும் என்பவையெல்லாம் வரும் வாரங்களில் அல்லது மாதங்களில் தெரியவரும் என எதிர்பார்க்கலாம்.

இவர் யாழ் மாநகர சபை உறுப்பினர் பதவியை ஏற்று, அதன் முதல் கூட்டத்திலும் பங்குபற்றியும் விட்டமையால் அதை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்படக்கூடிய வழக்கு (தகுதி முறைகேள் நீதிப் பேராணை மனு - Writ of quo warranto) மேன்முறையீட்டு நீதிமன்றத்திலேயே தொடுக்கப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

* * *

முல்லைத்தீவு மாவட்ட தமிழரசுக் கட்சியின் தலைவராக இருந்த வைத்தியர் சிவமோகன் கட்சிக்கு எதிராக செயல்பட்டார் என்ற குற்றச்சாட்டில் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கின்றார் என்பது தெரிந்ததே.

கட்சிக்கு எதிராக அவர் பல வழக்குகளைத் தொடர்ந்து இருந்தார். அவற்றில் ஒன்று யாழ் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் இன்று எடுத்துக் கொள்ளப்பட இருக்கின்றது.

ஆயினும் சுமுகமாக இடம்பெற்ற சில பூர்வாங்கப் பேச்சுக்களை அடுத்து அவர் இன்று தமது வழக்கை தாமாகவே கை வாங்குவார் என ஒரு செய்தி தெரிவித்தது.

இதற்கு முன்னதாக வைத்தியர் சிவமோகன் கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனை வவுனியாவில் சந்தித்துப் பேசி, சமரசமான சில இணக்கப்பாடுகளுக்கு வந்திருந்தார் என சில வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. ஆனால் அதனை சுமந்திரனிடமோ அல்லது வைத்தியர் சிவமோகனிடமோ தொடர்பு கொண்டு உறுதிப்படுத்த முடியவில்லை. இன்று வழக்கு கைவாங்கப்படுமானால் இத்தகைய சந்திப்பு இடம் பெற்று இருக்கக் கூடும் என்பதை ஓரளவு ஊகிக்க முடியும்.

## தமிழரசில் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் இது தொடர்பாக நேற்று வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:-

உள்ளூராட்சி சபைகளில் நிர்வாகங்களை ஏற்படுத்துவது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு இரண்டு தடவைகள் கூடி, விரிவாக ஆராய்ந்து தீர்மானங்களை எடுத்து இருக்கின்றது. அந்தத் தீர்மானங்களே கட்சியின் முடிவுகள். அவற்றையே கட்சியின் தலைவரும் செயலாளரும் உறுப்பினர்களுக்கு அறிவித்து முன்னெடுக்கின்றனர். அவற்றையே கட்சியின் முடிவாகக் கருதி முனெடுக்க வேண்டியது கட்சி உறுப்பினர்களின் கடமையாகும்.

தொகுதிக் கிளைகள், மாவட்டக் கிளைகளின் தீர்மானங்கள் என்ற பெயரில் கட்சியின் முடிவுக்கு மாறாக ஏதேனும் செயற்பாடுகளை, நடவடிக்கைகளை உறுப்பினர்கள் முன்னெடுத்தால், அவர்களுக்கு எதிராக உடனடிக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். - என்று கட்சியின் செயலாளர் சுமந்திரன் நேற்று விடுத்துள்ள செய்தி குறிப்பில் மேலும் தெரிவித்துள்ளார்.

## சு.கவை சந்திரிகா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூறுகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது சட்ட மோதல்களில் சிக்கியுள்ளது. சந்திரிகா தொடுத்த வழக்கினால் சிறிசேனவின் கட்சித் தலைவர் பதவி சவாலுக்கு உள்ளாகியுள்ளது. சிறிசேன இனி கட்சியின் தலைவர் பதவியில் நீடிக்கத் தயாராக இல்லாததால், அவர் மீது தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை வாபஸ் பெற சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை எடுத்துள்ளார் எனஜ் கூறப்படுகிறது.

இருப்பினும், தேர்தல் ஆணையத்திடம் உள்ள ஆவணங்களில், சிறிசேனவே தலைவராகக் குறிப்பிடப்பட்டுள்ளார்.

## மொறட்டுவ மீனவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

படகு இடையில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் இரு மீனவர்கள் காணாமல் போயுள்ளனர்.

மொரட்டுவை எகொட உயன பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முகத்துவாரம் மீனவ துறை முகத்துக்கு அருகில் நேற்று திங்கட் கிழமை மீன்பிடிப்பதற்காக கடலுக்குச் சென்ற இரு மீனவர்கள் மீளக் கரைக்கு திரும்பியிருந்த நிலையில், கடல் அலை சீற்றம் காரணமாக அவர்களின் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தை அடுத்து மீனவர்கள் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளனர். 39 மற்றும் 52 வயதுடைய மொரட்டுவை பகுதியை சேர்ந்த இருவரே இவ்வாறு காணாமல் போயுள்ளனர் எனொ பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடற்படையினரின் உதவியுடன் காணாமல் போனவர்களை மீட்கும் பணி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருவதாக தெரிவித்த எகொடஉயன பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.



# 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, அடுத்த 24 மணித்தியாலங்களுக்கு 6 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில், கொழும்பு, களுத்துறை, கண்டி, கேகாலை, நுவரெலியா மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, புத்தளம் முதல் மன்னார் மற்றும் காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையிலான கடற்பிராந்தியங்களில் காற்று மணிக்கு 35 முதல் 45 கிலோமீற்றர் வேகத்திலும், சில நேரங்களில் 60 முதல் 70 கிலோமீற்றர் வேகத்திலும் அதிகரிக்கும் சாத்தியம் நிலவுவதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது.

நாட்டை சூழவுள்ள ஏனைய கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும்.

மறு அறிவித்தல் வரை, இந்தக் கடல் பகுதிகளுக்குள் கடற்றொழிலாளர்கள் செல்ல வேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

# ஜூன் மாதத்தின் முதல் 15 நாள்களில் 63,000 சுற்றுலாப் பயணிகள் வருகை



2025 ஆம் ஆண்டின் ஜூன் மாதத்தின் முதல் 15 நாள்களில் 63,856 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இவ்வாண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து ஜூன் மாதம் 15 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 10 லட்சத்து 93 ஆயிரத்து 659 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதன்படி, ஜனவரி மாதத்தில் 252,761 சுற்றுலாப் பயணிகளும், பெப்ரவரி மாதத்தில் 240,217 சுற்றுலாப் பயணிகளும், மார்ச் மாதத்தில் 229,298 சுற்றுலாப் பயணிகளும், ஏப்ரல் மாதத்தில் 174,608 சுற்றுலாப் பயணிகளும், மே மாதத்தில் 132,919 சுற்றுலாப் பயணிகளும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது.



# இந்தியா - இலங்கை ஒப்பந்தம் தொடர்பான மனுவை விசாரிப்பதற்குத் திகதி அறிவிப்பு

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்க உத்தரவிடக் கோரி, தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனுவை விசாரிப்பதற்கு உயர் நீதிமன்றம் திகதியிட்டுள்ளது.

இந்த மனு நேற்று மூவரடங்கிய நீதியரசர்கள் ஆயம் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதன்போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான பிரதி மன்றாடியார் நாயகம் நிர்மலன் விக்னேஸ்வரன், மனு தொடர்பாக அமைச்சரவையிடம் ஆலோசனை பெற்று, சமர்ப்பணங்களை முன்வைப்பதற்குத் திகதியொன்றை வழங்குமாறு கோரினார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதியரசர்கள் ஆயம், குறித்த மனுவை எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளத் திகதியிட்டுள்ளது.

இந்த மனுவை வைத்தியர் குணதாச அமரசேகர உள்ளிட்ட குழுவினர் தாக்கல் செய்துள்ளதுடன், சட்டமா அதிபர், பிரதமர் ஹரிணி அமரசூரிய மற்றும் அமைச்சரவை ஆகிய தரப்பினர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

மேற்படி புரிந்துணர்வு ஒப்பந்தம், இலங்கையின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டுக்குத் தீங்கு விளைவித்துள்ளது எனவும், அது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்காமல் கையெழுத்திட அரசாங்கம் எடுத்த நடவடிக்கை முற்றிலும் சட்டத்திற்கு முரணானது எனவும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மலையகத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட இ.தொ.கா. முடிவு!

நுவரெலியா மாவட்டம் உட்பட மலையக மாவட்டங்களில் சேவல் சின்னத்தில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயல்படுவார்கள் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை தீர்மானித்துள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை நேற்று கொட்டகலயில் உள்ள காங்கிரஸ் தொழில்நுட்ப வளாகத்தில் கூடியது.

இக்கூட்டத்திற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய சபை உறுப்பினர்களுடன் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களும் அழைக்கப்பட்டிருந்தனர் .

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் முன்னிலை பெற்ற சபைகள் உட்பட நுவரெலிய மாவட்டத்தின் உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பது தொடர்பாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் முன்னிலை பெற்ற கட்சிகளின் உறுப்பினர்களின் தொகை அடிப்படையில் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தை அமைத்துக் கொள்வதே பொருத்தமானது என்ற கருத்தின் அடிப்படையில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சாண் ஏற முழம் சறுக்குதல்!

மிக மோசமான பொருளாதார நெருக்கடியை சந்தித்திருக்கும் இலங்கைக்கு அதிலிருந்து மீளுவது என்பது 'சாண் ஏற முழம் சறுக்கும்' விடயமாகத்தான் இருக்கின்றது. 2022 இல் மிகவும் நெருக்கடியான பொருளாதார இக்கட்டை எதிர்கொண்ட இலங்கை, அதிலிருந்து மெல்ல மெல்ல மீண்டு வரும் நிலையில், உலகளாவிய ரீதியில் இடம்பெறும் பல்வேறு நெருக்கடிகள் இலங்கையின் மீண்டெழும் எத்தனத்தை மிக மோசமாகப் பாதித்து வருகின்றன.

ஏற்கனவே ரஷ்ய - உக்ரைன் போர் இலங்கையின் பொருளாதார மீட்சியில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திருக்கையில் இப்போது ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான போர் வெடித்திருக்கின்றது.

இந்த இராணுவ மோதல் நிலைமை தீவிரமடைந்தால் இலங்கையில் எரிபொருள் விலைகள் உயரக்கூடும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த இராணுவ நிலைமை பிராந்திய ரீதியாக விஸ்தரித்தால், சுற்றுலாத் துறை உட்பட இலங்கையில் பல துறைகளை அது பாதிக்கும் அபாயம் உள்ளது என்று கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதாரத் துறையின் பேராசிரியர் பிரியங்கா துனுசிங்கே தெரிவித்துள்ளார்.

இந்தப் போரினால் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை ஏற்கனவே பத்து முதல் பன்னிரண்டு சதவீதம் வரை அதிகரித்துள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மசகு எண்ணெய் விலைகள் பீப்பாய்க்கு எழுபது டொலர் அளவைத் தாண்டியுள்ளது. இது கடந்த மார்ச் மாதத்திற்குப் பின்னர் ஏற்பட்ட மிக உயர்ந்த விலை அதிகரிப்பு ஆகும்.

மேலும், இந்த போர் பிராந்திய ரீதியாக பரவினால், இலங்கைக்கு கிடைக்கப் பெறும் அந்நிய செலாவணியை அது மிக மோசமாகப் பாதிக்க அதிக வாய்ப்புள்ளது. இந்த நிலைமை இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு உள்ளிட்ட நாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் மீது மிகவும் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் எனவும் கூறப்படுகின்றது.

இது குறிப்பாக வேலைப் பாதுகாப்பு, புதிய வேலை வாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறையை கடுமையாக பாதிக்கும் என பேராசிரியர் பிரியங்கா துனுசிங்கே மேலும் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு வேலைவாய்ப்புக்காக இலங்கையர்களை அனுப்புவது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக வெளியுறவு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திர தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கும் ஈரானுக்கும் இடையில் நிலவும் போர் காரணமாக முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக நேற்று கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கில் நிலவும் பதற்ற நிலைமை - அந்தப் பிராந்தியத்தில் நிலவும் ஸ்திரமின்மை - இலங்கை அதன் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீளும் விடயத்தில் அதிக தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதால் நிலைமையை இலங்கை உன்னிப்பாகக் கவனித்து வருவதாக இலங்கை வெளியுறவு அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

பெட்ரோலியத் தேவைகளுக்கு இறக்குமதியையே முழுமையாகச் சார்ந்துள்ள இலங்கைக்கு, உலகளாவிய எரிபொருள் விலை உயர்வு உடனடித் தாக்குதலாகும்.

ஈரானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான மோதல், எரிசக்தி வளம் மிக்க பிராந்தியத்திலிருந்து வரும் விநியோகங்களைத் தடுக்கக்கூடும் என்று வர்த்தகர்கள் கவலைப்பட்டனர் என பி.பி.ஸி. தெரிவித்துள்ளது.

இலங்கை பிராந்தியத்தில் உள்ள அதன் வெளிநாட்டுத் தொழிலாளர்களிடமிருந்து வரும் பணம் அனுப்புதலையே பெரிதும் நம்பியுள்ளது. மேலும் முழுமையான பதற்றம் அவர்களுக்கு வேலையில் இடையூறாக இருக்கும்.

"இரண்டு அல்லது மூன்று வாரங்களில் பதற்றம் தணிந்தால், அது சரியாகிவிடும். பதற்றம் நீண்ட காலத்திற்கு நீடித்தால், அது இலங்கைப் பொருளாதாரத்தை பாதிக்கும்" என்று அந்த வட்டாரம் தெரிவித்துள்ளது.

மேலும், பதற்றம் நிலவினால், தேயிலை போன்ற இலங்கை ஏற்றுமதிகளும் மோசமாகப் பாதிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.



# ஹொங்கொங்கிலிருந்து டில்லிக்கு பயணித்த ஏர் இந்தியா விமானத்தில் மீண்டும் பிரச்சினை

ஹொங்கொங் விமான நிலையத்திலிருந்து டெல்லி நோக்கிப் பயணித்த ஏர் இந்தியா விமானம் மீண்டும் ஹொங்கொங்கிற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

விமானத்தில் தொழில்நுட்ப பிரச்சினை இருப்பதாக விமானி தெரிவித்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனையடுத்து மேற்படி விமானம் ஹொங்கொங் விமான நிலையத்தில் பாதுகாப்பாகத் தரையிறக்கப்பட்டுள்ளது.

மேலும் விமானத்திலிருந்து அனைத்து பயணிகளும், பணியாளர்களும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து விமானத்தில் ஏற்பட்ட பிரச்சினை குறித்து சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



# இந்தியப் பிரதமர் மோடியும் இஸ்ரேல் பிரதமரும் உரையாடல்

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவும் தொலைபேசியில் கலந்துரையாடியதாக இந்தியப் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கிடையில் சமீபத்தில் அதிகரித்துவரும் பதற்றமான சூழ்நிலை குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இஸ்ரேல் – ஈரான் இடையே இடம்பெற்றுவரும் தாக்குதல் சம்பவம் குறித்து இந்தியப் பிரதமர் கவலையை வெளிப்படுத்தியதுடன், இரு நாடுகளுக்குமிடையிலான அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தியதாகக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் மற்றும் இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் இடையில் தொலைபேசி உரையாடல் ஒன்று இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.



# இந்தியாவின் தொடர்ந்தும் அதிகரிக்கும் வெப்பநிலை

இந்தியாவின் வடக்கு மற்றும் மத்திய பகுதிகளில் தொடர்ந்து வெப்பநிலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதிகளில் 45 பாகை செல்லியஸ்/க்கும் அதிகமான அளவு வெப்பநிலை பதிவாகியுள்ளதாக கூறப்படுகிறது.

உத்திரப் பிரதேசம், டெல்லி, மத்திய பிரதேசம், ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட மாநிலங்களில் வெப்பநிலை அதிகரித்துள்ளது.

இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.





# இஸ்ரேல் மீது மீண்டும் தீவிர தாக்குதல் போர் நிறுத்த பேச்சை நிராகரித்த ஈரான்

இஸ்ரேல் மீது ஈரான் நேற்று அதி காலை மீண்டும் ஏவுகணைத் தாக்குதல் களை நடத்தியது என சர்வதேச ஊட கங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் இஸ்ரேல் முழுவதும் வான் வழித் தாக்குதல் குறித்த எச்சரிக்கை சைரன்கள் ஒலித்தன. இஸ்ரேலின் வடக்கு மற்றும் மையப் பகுதியில் ஏவுக ணைகள் தாக்கியதில் 67 பேர் காயமடைந் தனர் என தகவல்கள் வெளியாகியுள் ளன.

ஈரானில் உள்ள அணுசக்தி மையங் கள் மற்றும் இராணுவ மையங்கள் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வரும் நிலையில், ஈரானும் இஸ்ரேலை கடுமையாக தாக்கி வருகிறது. நேற்று திங்கள் கிழமை அதிகாலையும் ஈரான் பல ஏவுகணைகளை இஸ்ரேல் நகரங்கள் மீது வீசியது. ஈரானிய ஏவுகணைகளைத் தடுத்த இஸ்ரேலின் பாதுகாப்பு அமைப் புகளிலிருந்து வந்த சக்திவாய்ந்த வெடிப்பு சத்தங்கள், நேற்று அதிகாலையில் டெல் அவிவை உலுக்கியது, இதனால் அந்த நகரத்தின் மீது கரும்புகை வானத்தில் எழுந்தன.

டெல் அவிவ் அருகே உள்ள மத்திய இஸ்ரேலிய நகரமான பெட்டா டிக்வாவில் நகரை, ஈரானிய ஏவுகணைகள் தாக்கின. அங்குள்ள ஒரு குடியிருப்பு கட்டடத்தை ஏவுகணைகள் தாக்கியதில், அந்த கட்டிடங்கள் பெரிதும் சேதமடைந்தன. மீட்புப் பணி தீவிரமடைந்துள்ள நிலை யில், அந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர் களின் எண்ணிக்கை குறித்து உடனடி யாக எந்த தகவலும் வெளியாகவில்லை.

அதே போல நேற்று அதிகாலை ஜெரு சலேம் நகரிலும் பலத்த வெடிப்பு சத்தங் கள் கேட்டன. இஸ்ரேல் இராணுவம் ஈரானில் இருந்து புதிய ஏவுகணை தாக் குதல்கள் குறித்து எச்சரித்து, பொதுமக் கள் மறு அறிவிப்பு வரும் வரை பாது காப்பாக இருக்குமாறு அறிவுறுத்திய சிறிது நேரத்திலேயே இந்த தாக்குதல் நடந்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் இராணு வம் ஈரானில் இருந்து மீண்டும் ஒரு புதிய ஏவுகணை தாக்குதல் இருக்கும் என எச்சரித்துள்ளது. அந்த அறிவிப்பில், “சிறிது நேரத்திற்கு முன்பு, இஸ்ரேல் நாட்டின் எல்லையை நோக்கி ஈரானில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகளை ஐ.டி.எஃப் அடையாளம் கண்டுள்ளது,” என்று டெலிகிராமில் தனது அதிகாரப் பூர்வ பக்கத்தில் கூறியது. மேலும், பொது மக்கள் பாதுகாக்கப்பட்ட இடத்திற்குள் நுழைந்து மறு அறிவிப்பு வரும் வரை அங்கேயே இருக்குமாறு அறிவுறுத்தப் பட்டுள்ளது என்றும் தெரிவித்தது.

இதேவேளை, இஸ்ரேல் கடும் தாக் குதலுக்கு உள்ளாகியுள்ள நிலையில், போர் நிறுத்த பேச்சுவார்த்தைக்கு தயா ராக இல்லை என்று ஈரான் மத்தியஸ்தர் களான கட்டார் மற்றும் ஓமனிடம் தெரிவித் துள்ளது,

“இஸ்ரேலின் முன்கூட்டிய தாக்கு தல்களுக்கு ஈரான் தனது பதிலடியை முடித்த பின்னரே தீவிர பேச்சுவார்த்தை களைத் தொடருவோம் என்று கத்தார் மற்றும் ஓமன் மத்தியஸ்தர்களிடம் ஈரான் தரப்பினர் தெரிவித்தனர். நாங் கள் தாக்குதலுக்கு உள்ளாகும்போது பேச்சுவார்த்தை நடத்த மாட்டோம் எனவும் ஈரான் தரப்பு தெரிவித்துள்ளது.” என்று மத்தியஸ்த பேச்சுவார்த்தைக்கான அதி காரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மீது ஈரான் ஒரே இரவில் பாரிய தாக்குதல்களை நடத்தியதைத் தொடர்ந்து, ஈரானின் ஏவுகணை தளங் களை குறிவைத்து இஸ்ரேல் புதிய தாக் குதல்களை கட்டவிழ்த்து விட்டுள்ளது என பது குறிப்பிடத்தக்கது.















# இஸ்ரேலிய பிரதமரின் திட்டத்தை நிராகரித்தார் டொனால்ட் ட்ரம்ப்

ஈரானின் உயர் தலைவரான அயதுல்லா அலி கொமேனியை கொலை செய்யும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் திட்டத்தை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நிராகரித்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல்களைத் தொடங்கிய பின்னர் நடந்ததாகக் கூறப்படும் ஒரு உரையாடலில், கொமேனியை படுகொலை செய்வது நல்ல யோசனையல்ல என்று டொனால்ட் ட்ரம்ப், நெதன்யாகுவிடம் கூறினார் என செய்திகள் வெளியாகியுள்ளன.

எனினும் இந்த அறிக்கை குறித்து ட்ரம்ப் பகிரங்கமாகக் கருத்து தெரிவிக்கவில்லை.

இதேவேளை, இந்த அறிக்கையை நெதன்யாகு நேரடியாக உறுதிப்படுத்தவோ மறுக்கவோ இல்லை.

ஒருபோதும் நடக்காத உரையாடல்கள் குறித்து பல தவறான தகவல்கள் உள்ளன, எனினும் அதில் ஈடுபடப் போவதில்லை என்று இஸ்ரேலிய பிரதமர் கூறியுள்ளார்.

தாம் செய்ய வேண்டியதைச் செய்வதாகவும், அமெரிக்காவிற்கு எது நல்லது என்று அமெரிக்காவுக்குத் தெரியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலும் ஈரானும் ஒரு ஒப்பந்தத்தை எட்டமுடியும் என நம்புவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கனடாவில் இடம்பெறும் ஜி 7 உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்கு முன்னதாக இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இஸ்ரேலும் ஈரானும் ஒப்பந்தமொன்றைச் செய்து கொள்ளவேண்டும் என ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தனது சமூக வலைத்தள பக்கத்தில் பதிவொன்றை இட்டுள்ளார்.

இதற்கிடையில் நாடுகளுக்குமிடையிலான மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், இஸ்ரேல் மற்றும் ஈரானின் தாக்குதல்கள் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# லண்டனிலிருந்து சென்னை புறப்பட்ட விமானம் அவசரமாக தரையிறக்கம்

லண்டனிலிருந்து சென்னைக்கு 360 பயணிகளுடன் புறப்பட்ட பிரித்தானியப் பயணிகள் விமானம், இயந்திர கோளாறு காரணமாக நேற்று திடீரென தரையிறக்கப்பட்டுள்ளது.

இதனால் லண்டனிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து லண்டனுக்கும் புறப்படவிருந்த இரண்டு பிரித்தானியப் பயணிகள் விமானங்கள் ரத்து செய்யப்பட்டன.

இந்த விமானங்கள் ரத்து செய்யப்பட்டதால் 700 இற்கும் அதிகமான பயணிகள் பாதிக்கப்பட்டனர் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



# ஈரானின் செய்தி வலையமைப்பின் தலைமையகம் மீது இஸ்ரேல் தாக்குதல்

## நேரடி ஒளிபரப்பும் நிறுத்தம்

ஈரான் இஸ்லாமியக் குடியரசு செய்தி வலையமைப்பின் தலைமையகத்தை இஸ்ரேலியப் படைகள், நேற்று தாக்கி, அதன் நேரடி ஒளிபரப்பை திடீரென நிறுத்தியதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஈரானிய பிரசாரம் மற்றும் தூண்டுதல் மறைந்து போகும் பாதையில் உள்ளது என, இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் கூறியதைத் தொடர்ந்து, இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

பெண் தொகுப்பாளர் ஒருவர் இஸ்ரேலுக்கு எதிராக நேரடி ஒளிபரப்பில் விமர்சனத்தை வெளியிட்டுக் கொண்டிருக்கும் போது, இந்த தாக்குதல் இடம்பெற்றதாக ஈரானிய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதனையடுத்து, அவர் ஒளிபரப்பை விட்டு வெளியேறும் காட்சியைக் காண முடிந்தது. இந்த சம்பவத்திற்கு ஒரு மணி நேரத்திற்கு முன்பு, தொலைக்காட்சி நிலையங்கள் அமைந்துள்ள தெஹ்ரானின், அந்தப் பகுதியை விட்டு வெளியேறுமாறு இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.






# 2009 இற்கு முன் வழங்கப்பட்ட சாரதி அனுமதிகள் ரத்தாகுமா?

2009 ஆம் ஆண்டுக்கு முன்பு பெறப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்களை ரத்து செய்வது குறித்து உடனடி தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை என மோட்டார்வாகனபோக்குவரத்துதிணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

“2009 ஆம் ஆண்டுக்கு முன்பு பெறப்பட்ட சாரதி அனுமதிப் பத்திரங்கள் ரத்து செய்யப்படும்“ என்ற தலைப்பில் சமீபத்தில் பல தேசிய செய்தித்தாள்களில் செய்திகள் வெளியிடப்பட்டிருந்தாலும், மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் இது தொடர்பில் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக 2009 ஆம் ஆண்டுக்கு முன்பு பெறப்பட்ட சாரதி அனுமதி பத்திரங்களுக்குப் பதிலாக புதிய சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பண்டிதர் வீரகத்திப்பிள்ளை பரந்தாமனின் இறுதி வணக்க நிகழ்வில் மக்கள் அஞ்சலி








தாயகத்தின் முதுபெரும் கலை இலக்கிய பேராளரும், மொழி ஆய்வாளர், கவிஞர், பாடலாசிரியர், நாடக ஆசிரியர் என பேராளுமை கொண்ட பண்டிதர் வீரகத்திப்பிள்ளை பரந்தாமனின் இறுதி வணக்க நிகழ்வு நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றது.

அவரின் புகழுடல் புலோலி தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் உள்ள மாமறவர் மணிமண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த நிலையில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ். சிறிசற்குணராஜா உள்ளிட்டோர் அஞ்சலி செலுத்தினர்.

இந்த வணக்க நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுடன் கல்விமான்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இறுதி வணக்க நிகழ்வில் அஞ்சலி உரைகளும் இடம்பெற்று தகனக் கிரியை ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் இடம்பெற்றது.




# மன்னாரில் மக்கள் அரசியல் நலன் சார்ந்து செயல்பட வருமாறு சங்குக் கூட்டணிக்கு தமிழரசின் மாவட்டத் தலைவர் அழைப்பு

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கு தனிப்பட்ட கோரிக்கை ஒன்றை முன் வைக்கின்றோம். மன்னார் மாவட்ட மக்களின் அரசியல் நலன் சார்ந்து செயல்படுவதற்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்டக் கிளை தயாராக இருக்கிறது. எனவே மன்னார் மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளை அமைக்கும் விடயத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி எங்களுடன் இணைந்து செயற்பட முன் வருவார்கள் எனத் தாம் நம்புகின்றார் என முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்டக் கிளைத் தகைவருமான இ.சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று திங்கட்கிழமை காலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடந்து முடிந்து தற்போது உள்ளூராட்சி மன்றங்களுக்கான சபைகளை அமைக்கும் நடவடிக்கைகள் உள்ளூராட்சி ஆணையாளரினால் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் 24 ஆம் மற்றும் 25 ஆம் திகதிகளில் 5 சபைகளுக்கான தவிசாளர்கள் தெரிவு செய்கின்ற நிகழ்வுகள் இடம்பெற உள்ளன.

அதனடிப்படையில் ஒரு விடயத்தை மக்களுக்கும், போட்டியிட்டுள்ள அரசியல் கட்சிகளுக்கும் கோரிக்கையாகவும், தெளிவு படுத்தலையும் வழங்கும் வகையிலும் இந்த ஊடக சந்திப்பை மன்னார் மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்துள்ளது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மன்னார் மாவட்டத்தில் முசலி பிரதேச சபை தவிர, மன்னார் நகர சபை. மன்னார், நானாட்டான், மாந்தை மேற்கு பிரதேச சபைகள் உள்ளடங்களாக 4 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்டது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளையின் நோக்கம் தமிழ்க் கட்சிகள் அதிக ஆசனங்களை கைப்பற்ற வேண்டும். அதன் மூலம் சபைகளை அமைக்க வேண்டும் என்பதே. அந்த நோக்கத்தோடு நாங்கள் செயல்பட்டு இருந்தோம். மன்னார் மாவட்டத்தில் குறிப்பாக வீட்டுச் சின்னத்தில் தமிழரசுக் கட்சியும் சங்கு சின்னத்தில் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பும் போட்டியிட்டது.

தேர்தலுக்கு முன்னர் ஓர் இணக்கப்பாடு ஏற்பட்டு இருந்தது. ஒவ்வொரு சபைகளிலும் அதிக ஆசனங்கள் எடுக்கின்ற கட்சிக்கு மற்றைய கட்சி ஆதரவு வழங்குவதாக இனக்கப்பாடு ஏற்பட்டது.

மன்னார் பிரதேச சபையில் தலைமன்னார் பியர் வட்டாரத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் கோரிக்கைக்கு அமைவாக தமிழரசு கட்சி வேட்பாளரை நியமிக்கவில்லை.

அதே போல் மாந்தை மேற்கு பிரதேச சபையில் விடத்தல் தீவு இரட்டை தொகுதி வட்டாரத்தில் தமிழரசு கட்சி வேட்பாளரை நியமித்தால் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியினர் வெற்றி பெற முடியாது என்ற காரணத்தால் அங்கும் நாங்கள் வேட்பாளர்களைப் போடவில்லை.

அதனடிப்படையில் மன்னார் நகர சபை, மன்னார். மாந்தை மேற்கு பிரதேச சபைகள் ஆகிய மூன்று உள்ளூராட்சி சபைகளிலும் ஏனைய கட்சிகளுடன் ஒப்பிடுகின்ற போது இலங்கை தமிழரசு கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றுள்ளது.

அதனடிப்படையில் தேர்தல் முடிவு வந்த பிற்பாடும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியினருடைய
ஒருங்கிணைப்பாளர் மற்றும் அக்கட்சியை சேர்ந்தவர்கள் தமிழரசுக்கட்சி தவிசாளரை நியமிக்குமாறும், தாங்கள் உப தவிசாளரை நியமிப்பார்கள் எனவும் கூறியிருந்தனர். பின்னர் அவர்கள் நிபந்தனை விதித்தார்கள்.

மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளரை தமது கட்சிக்கு வழங்கும் பட்சத்தில் தாங்கள் ஏனைய சபைகளில் ஆதரவு வழங்குவார்கள் எனத் தெரிவித்தார்கள்.

தொடர்ச்சியாக 3 தடவைகள் பேச்சு வார்த்தை நடைபெற்று மூன்றாம் கட்ட பேச்சு வார்த்தையில் மாந்தை மேற்கு பிரதேச சபையில் தவிசாளர் தெரிவில் முதல் 2 வருடம் தமிழரசுக் கட்சிக்கும் அடுத்த 2 வருடம் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிகும் வழங்குவது என இரு தரப்பினருக்கும் உடன்பாடு எட்டப்பட்டது.

மாந்தை மேற்கில் தமிழரசுக் கட்சிக்கு அதிக ஆசனங்கள் இருக்கின்ற காரணத்தினால் எங்களுக்கு முதல் 2 வருடங்களை வழங்க கோரிக்கை விடுத்தோம். ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியினர் யோசித்து விட்டுக் கூறுவதாகச் சொன்னார்கள்.

ஆனால் அவர்கள் இன்று வரை எந்த முடிவையும் எமக்கு அறிவிக்கவில்லை. குறித்த மூன்று சபைகளுக்குமான தவிசாளரை நாங்கள் அறிவிக்க இருக்கின்றோம்.

நானாட்டான் பிரதேச சபை குறித்து கட்சிகளுக்கு இடையிலான இணக்கப்பாட்டின் பின்னர் முடிவுகள் எடுக்கப்படும். எனவே மன்னார் மாவட்டத்தில் போட்டியிட்ட அனைத்து கட்சிகளுக்கும் மக்களுக்கும் ஒரு விடயத்தைக் கூற விரும்புகிறேன்.

இலங்கை தமிழரசுக் கட்சியில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்களின் கோரிக்கைக்கு அமைவாகவும் கட்சியின் தீர்மானத்திற்கு அமைவாகவும், இந்த கோரிக்கை யை விடுக்கின்றோம்.

அதிக ஆசனம் பெற்ற சபைகளில் தமிழ் கட்சிகள் முன் வந்து நிபந்தனையற்ற வகையில் எமக்கு ஆதரவு வழங்க வேண்டும். மேலும் மாந்தை மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தொடர்பில் 2 வருடங்கள் தமிழரசுக் கட்சிக்கும் ஏனைய 2 வருடம் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும் வழங்க இலங்கை தமிழரசு கட்சி தயாராக இருக்கிறது.

எனவே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணிக்கு தனிப்பட்ட கோரிக்கை ஒன்றை முன் வைக்கின்றோம். மன்னார் மாவட்ட மக்களின் அரசியல் நலன் சார்ந்து செயல் படுவதற்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட கிளை தயாராக இருக்கிறது. எனவே ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி மன்னார் மாவட்டத்தில் எங்களுடன் இணைந்து சபை அமைக்கும் விடயத்தில் முன் வருவார்கள் என நம்புகிறோம். - என்று முன்னாள் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இ.சாள்ஸ் நிர்மலநாதன் மேலும் தெரிவித்தார்.



# ஓட்டமாவடியில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிளந்து தவிசாளர் பதவியைக் கைப்பற்றியது மு.காங்கிரஸ்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் முகமட் ஹனிபா முகமட் பைறூஸ் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பக்கம் தாவி, தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். அந்த சபையை முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நேற்றுத் திங்கட்கிழமை கைப்பற்றியது. இந்தப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளர் தெரிவு செய்யும் அமர்வு நேற்றுத் திங்கட்கிழமை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த இரு உறுப்பினர்கள் அமர்வில் கலந்து கொள்ளாத நிலையில் தவிசாளர் தெரிவின் போது ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் முகமட் ஹனிபா முகமட் பைறூஸ் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவுடனும் அதேசமயம் ஔக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் எம்.எம்.எஸ்.எம். கலாட்டீனும் போட்டியிட்டனர்.

இதன்போது திறந்த வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது சிறிலங்கா முஸ்லிம காங்கிரஸ் பக்கம் மாறிய முகமட் ஹனிபா முகமட் பைறூஸ் 9 வாக்குகளால் தவிசாளராக தெரிவு செய்யப்பட்டார். இதனை தொடர்ந்து பிரதி தவிசாளருக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சபை உறுப்பினர் ஏ.எச்.நூபைஸ், ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் எல்.எல்.எம். யலால்தீன் ஆகியோர் போட்டியிட்ட நிலையில் பிரதி தவிசாளராக முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சபை உறுப்பினர் ஏ.எச்.நூபைஸ் 9 வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார்.

19 உறுப்பினர்களைக் கொண்ட கோறளைப்பற்று மேற்கு சபையில் ஐக்கிய மக்கள் சக்தி 08 உறுப்பினர்களையும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 06 உறுப்பினர்களையும், தேசிய மக்கள் சக்தி 02 உறுப்பினர்களையும், இலங்கை தமிழ் அரசு கட்சி ஓர் உறுப்பினரையும், சுயேச்சைக்குழு ஓர் உறுப்பினரையும் கொண்டுள்ளன.


இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்கள் சாணக்கியன், எம்.எல்.எம்.ஹிஸ்புல்லா மற்றும் ஏறாவூர் நகர சபை தவிசாளர் உள்ளிட்ட பலர் பார்வையாளர்களாகக்கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.










# இரத்தினபுரி மாநகர சபையின் புதிய மேயராக தேசிய மக்கள் சக்தியின் இந்திரஜித் தெரிவு!

(ஸ்ரீநிவாசகம் இரவீந்திரன்)

இரத்தினபுரி மாநகர சபையின் புதிய மேயராக தேசிய மக்கள் சக்தியை சேர்ந்த கே.ஏ.ஆர்.இந்திரஜித் கட்டுக்கம்பளை 02 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ளார் என சபரகமுவ மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் உத்தியோகப்பூர்வமாகத் தெரிவித்தார்.

கடந்த மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் எந்தவொரு கட்சியும் தனித்து அறுதொ பெரும்பான்மைப் பலத்தை பெற்றிராத நிலையில் நேற்று 16 ஆம் திகதி இரத்தினபுரி மாநகர சபையின் முதலாவது கூட்டம் சபரகமுவ மாகாண உள்ளூராட்சி மன்ற ஆணையாளர் எல்.எம்.பி. டபிள்யூ.பண்டாரவின் முன்னிலையில் நடைபெற்றது.

அப்போது தேசிய மக்கள் சக்தி சார்பாக கே.ஏ.ஆர். இந்திரஜித் கட்டுக்கம்பளையும் அவரை எதிர்த்து பொது ஜன முன்னணியை சேர்ந்த என்.ஏ. ஆர்.டி.தர்ஷன சமத் குணவர்தனவும் போட்டியிட்டனர்.

இதன்போது இரகசிய வாக்களிப்புக்கு விடப்பட்ட போது இந்திரஜித் கட்டுக்கம்பளை 14 வாக்குகளையும் சமத் குணவர்தன12 வாக்குகளையும் பெற்றனர்.

இதன் பின்னர் பிரதி மேயர் தெரிவின் போது வீ.டி.சாரங்க விதானகே 02 மேலதிக வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டார். உறுப்பினர் சாரங்கவிற்கு 14 வாக்குகளும் அவரை எதிர்த்து போட்டியிட்ட உறுப்பினர் சுவர்ண மல்லி மாராச்சிக்கு 12 வாக்குகளும்கிடைத்தன.

இதன் படி இரத்தினபுரி மாநகர சபையின் 15 ஆவது மேயராகத் தெரிவு செய்யட்ட இந்திரஜித்துக்கும் பிரதி மேயர் சாரங்கவிற்கும் உறுப்பினர்கள் பலரும் தமது வாழ்த்துகளை தெரிவித்தனர்.

வரலாற்றில்முதற் தடவையாக எதிர் எதிர் கட்சிகளில் மேயரும் பிரதி மேயரும் தெரிவு செய்யட்டமை விசேட அம்சமாகும்.

இரத்தினபுரி மாநகர சபையில் தெரவு செய்யப்பட்ட மொத்த உறுப்பினர்கள் 27 பேரில் 12 உறுப்பினர்கள் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் எதிர்க்கட்சியை சேர்ந்தவர்கள் ஆவர்.

# புல்மோட்டை கனியமணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் நிறுவனத்தினுடைய வாயிலை மூடி குந்துமறியல் போர்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை, புல்மோட்டை கனியமணல் கூட்டுத்தாபன ஊழியர்கள் சிலர் நேற்றுக் காலை தங்களுக்கு நிரந்த நியமனத்தையும், வழங்கப்படாத நிலுவைச் சம்பளத்தையும் வழங்கக் கோரி நிறுவனத்தினுடைய வாயிலை மூடி குந்துமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



புல்மோட்டை கனியமணல் கூட்டுத்தாபனத்தில் கடந்த வருடமீடு-1-2016 சம்பள அளவுத்திட்டத்தின்கீழ் அமைய அடிப்படையில் நியமனம் வழங்கப்பட்ட ஊழியர்களே போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது தமக்கு ஒருவருட காலமாக சம்பளம் வழங்கப்படவில்லை எனவும், தொடர்ச்சியாகத் தாம் ஏமாற்றப்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவித்து எவரும் உட்செல்லவோ, வெளியேறவோ முடியாதவாறு நிறுவனத்தின் வாயிலை மூடி குந்துமறியலில் ஈடுபட்டனர்.

அங்கு வருகை தந்த புல்மோட்டை உதவி பொலிஸ் அத்தியட்சகர் நிறுவன அதிகாரிகளிளுடன் கலந்துரையாடி எதிர்வரும் 25ஆம் திகதிவரை கால அவகாசம் வழங்குமாறு கோரியதை அடுத்து போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

தற்போது கடமையாற்றும் ஊழியர்களில் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 34 பேரும், ஜூலை மாதம் 46 பேரும் அமைய அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தனர் எனவும் இவர்களில் 34 பேருக்கு 3 மாதங்கள் சம்பளம் வழங்கப்பட்டும் ஏனையவர்களுக்கு இதுவரை எவ்வித கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வருடம் மார்ச் மாதம் 7ஆம் திகதியும் நிலுவை சம்பளத்தை வழங்கக் கோரியும், நியமனத்தை மாற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் தாங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் எனவும், இதன்போது நேர்முகத்தேர்வு வைப்பார்கள் என உறுதி தெரிவித்ததை அடுத்து ஆர்ப்பாட்டத்தை தற்காலிகமாக கைவிட்டிருந்தனர் எனவும், எனினும் இதுவரை அது நடைபெறவிலை எனவும் நேற்று குந்துமறியலில் ஈடுபட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இது தொடர்பாக நிர்வாகத்துடன் பலமுறை பேச்சு நடத்தியும் சம்பளம் வழங்கப்படாத நிலையில் புல்மோட்டைக்கு வருகைதந்த அமைச்சர் சுனில் ஹந்துநெத்தியுடனான பேச்சுன்போது பொது முகாமையாளரினால் பெப்ரவரி மாதம் சம்பளம் வழங்கப்படும் என கூறப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இது தொடர்பாக நிர்வாகத்துடன் பேசியபோது நியமனத்தை நாள் சம்பள அடிப்படையில் மாற்றி நாளாந்த கூலி அடிப்படையில் வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக தெரியப்படுத்தபட்டுள்ளதாகவும், அந்த அடிப்படையிலான ஒழுங்கை எதிர்த்தும், சம்பளம் வழங்கக் கோரியும் தொடர்ச்சியாகப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாகவும், தமக்கு சரியான தீர்வு கிடைக்கப்பெறும் வரையில் இதைத் தொடரவிருப்பதாகவும் அந்த ஊழியர்கள் மேலும் தெரிவித்தனர்.




# பெற்றோர்களின் உணர்வுகள், நடத்தைகளைக் கையாள மட்டு. செயலகத்தில் மனோகரி விழிப்புணர்வு செயலமர்வு

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் பொற்றோர்களின் உணர்வுகள் மற்றும் நடத்தைகளை கையாள்வதற்கான மனோகரி விழிப்புணர்வு செயலமர்வு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் புதிய மாட்ட செயலகத்தில் கடந்த 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

மாட்ட செயலத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு உணர்வுகள் மற்றும் நடத்தைகளை கையால்வதற்கான இந்த மனோகரி விழிப்புணர்வு செயலமர்வு மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி ஸ்ரீகாந்த் மேற்பார்வையின் கீழ் இடம் பெற்றது.

சமூக மட்டத்தில் காணப்படும் பிரச்சினைகளைச் சிந்தித்துத் தீர்த்து வைப்பதற்கும் சமூகத்தில் சிறந்த மாற்றத்தை ஏற்படுத்துவதற்குமாக இக்கற்கை நெறி அமைந்திருந்தது.

இதன் போது சுய ஒழுக்கம், சுய வழிகாட்டுதல், சுய கண்காணிப்பு, உண்மைத் தன்மையை அறிதல் மற்றும் இவ்வாறான பல விடயங்கள் குறித்துத் தெளிவூட்டப்பட்டது.

தனிநபர், குடும்பம், சமூகம் என்பவற்றிற்கு தேவையாகக் கருதப்படும் விடயதானங்கள் தொடர்பான விழிப்புட்டல்கள் இதன் போது வழங்கப்பட்டன.

இச் செயலமர்வில் ஓய்வு பெற்று பிரதி கல்வி பணிப்பாளர் என்.தயானந்தன், வடமாகாண உளசமூக வள நிலையத்தின் ஓய்வு நிலை உதவி முகாமையாளர் செல்வி சிவபாதசுந்தரம் உதயகலா ஆகியோர் வளவாளர்களாகச் செயற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.














# காரைதீவில் களைகட்டிய மகளிர் எல்லே ‘கார்ணிவல்’!

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியின் 75வது ஆண்டு நிறைவு பவளவிழாவினை முன்னிட்டு 2003 ழு.ஃடு மற்றும் 2006 யு.ஃடு மாணவர் ஒன்றியம் நடாத்திய மகளிருக்கான பவளவிழா எல்லே சுற்றுப்போட்டி கடந்த இரண்டு தினங்களாகக் களைகட்டியது.

2000 ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான 20 பழைய மாணவிகள் அணியினர் இந்த எல்லே சுற்றுப்போட்டி யில் இரண்டு நாள்கள் பலத்த உற்சாகத்துடன் கலந்து கொண்டனர்.

இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் ஒன்றியத்தலைவர் என். றிஷான்த் தலைமையில் காரைதீவு விபுலானந்தா மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை கோலாகலமாக நடைபெற்றது.

ஊரே திரண்டிருந்த இவ்வரலாற்று நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப் பாளர் திருமதி வரணியா சாந்தரூபன் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.சஞ் சீவன், ஏ. பார்த்தீபன் , கல்லூரி அதிபர் எம். சுந்தரராஜன் ,ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர்களான வி.ரி. சகாதேவராஜா, கே. செல்லத்துரை, ஆசிரிய ஆலோசகர் எஸ்.சிவபரன் , பாடசாலை அபிவிருத்திச் சங்க செய லாளர் திருமதி டாக்டர் ஜீவராணி, பழைய மாணவர் சங்க செயலாளர் எல்.சுலக்ஷன் ஆகியோர் கலந்து கொண்டார்கள் .

20 அணிகள் இரண்டு நாள்களாக கலந்து கொண்ட இச் சுற்றுப்போட்டியில் 38 போட்டிகள் இடம்பெற்றன. இறு திப்போட்டி 2017 ராவணா அணி யினருக்கும் 2019 ஸ்பார்ட்டன் அணி யினருக்கும் இடையே நடந்தது.

இறுதிப்போட்டியில் 2017 ராவணா அணி வெற்றி பெற்று சாதனை படைத்தது.

அவர்களுக்கான வெற்றிக்கிண் ணங்கள் அதிதிகளால் வழங்கி வைக்கப்பட்டன. கற்பித்த ஆசிரியர்கள் பொன்னாடை போர்த்தி பாராட்டப்பட் டார்கள்.





















# தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த பொறியியலாளர் ரின்சாத் புத்தளம் மாநகரசபை முதல் மேயராக ஏகமனதாகத் தெரிவு

**(கற்பிட்டி எம்.ச்.எம் சியாஜ்)**

புத்தளம் மாநகர சபையினையும் ஆளும் தேசிய மக்கள் சக்தி கைப்பற்றி ஆட்சி அமைத்துள்ளது.

புத்தளம் மாநகர சபையின் முதலாவது மேயராக தேசிய மக்கள் சக்தியின் முதலாம் வட்டார வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற பொறியியலாளர் ரின்சாத் அஹ்மத் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் மாநகர சபையின் முதலாவது பிரதி மேயராக ஐக்கிய மக்கள் சக்தியின் ஏழாம் வட்டார வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்ற நுஸ்கி நிசார் பகிரங்கமாக நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார். நுஸ்கி நிசார் புத்தளம் நகர சபையின் முன்னாள் தலைவர் நஸ்மி நிசாரின் சகோதரர் ஆவார்.

புத்தளம் மாநகர சபைக்கான முதலாவது கன்னி அமர்வு மாநகர சபையின் பொது நூலகத்தில் அமையப்பெற்றுள்ள மாநகர சபையின் சபா மண்டபத்தில், நேற்றுத் திங்கட்கிழமை மாலை 03 மணியளவில் இடம்பெற்றது.

சபைக்கு தெரிவாகியுள்ள தேசிய மக்கள் சக்தியின் 07 உறுப்பினர்கள்,



ஐக்கிய மக்கள் சக்தியின் 04 உறுப்பினர்கள், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் 03 உறுப்பினர்கள், நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கட்சியின் 03 உறுப்பினர்கள், ஐ.தே. கட்சியின் 01 உறுப்பினர் மற்றும் பந்து சின்ன சுயேச்சைக் குழுவின் 01 உறுப்பினர் என மொத்தமாக 19 உறுப்பினர்கள் சபையில் பிரசன்னமாகி இருந்தனர்.

சபை நடவடிக்கைகளின் போது மேயராக பொறியியலாளர் ரின்சாத் அஹ்மத் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். பிரதி மேயருக்கு விஜித பிரசன்ன மற்றும் நுஸ்கி நிசார் ஆகியோரின் பெயர்கள் முன்மொழியப்பட்டன. இதனையடுத்து நடைபெற்ற பகிரங்க வாக்களிப்பில் நுஸ்கி நிசார் 10 - 06 வாக்குகளினால் வெற்றி பெற்று பிரதி மேயராக தெரிவானார்.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கட்சியின் 03 உறுப்பினர்களும் வாக்களிப்பில் பங்கேற்கவில்லை.

இதனையடுத்து புதிய மேயர் சபையினை பொறுப்பேற்று தனது கன்னி உரையினை நிகழ்த்தினார். ஏகமனதாக தன்னை தெரிவு செய்ததற்கு நன்றி தெரிவித்த அவர், ஊரின் நலனுக்காக அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்போம் என அழைப்பு விடுத்தார்.

புதிய மேயரையும், பிரதி மேயரையும், உறுப்பினர்களையும் வரவேற்பதற்காக அதிகளவான பொதுமக்கள் புத்தளம் பொது நூலகத்துக்கு முன்பாக திரண்டிருந்தனர்.

புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஜே.எம்.பைசல், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் ஆகியோரும் இதன் போது பிரசன்னமாகி இருந்தனர்.






# மூதூர் மத்திய கல்லூரி முன் கவனவீர்ப்பு!

(ஏ.எச்.ஹஸ்பர்)

மூதூர் மத்திய கல்லூரியில் நிலவும் கட்டடத் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறும்,புதிய கட்டடத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதியை விடுவித்து வேலைகளை ஆரம்பிக்குமாறும் வலியுறுத்தி நேற்றுத் திங்கட்கிழமை பாடசாலைக்கு முன்பாக அமைதிவழி கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள், பாதுகாவலர்கள் மற்றும் பழைய மாணவர்கள் இணைந்து இந்தக் கவனவீர்ப்பை ஏற்பாடு செய்திருந்தனர்.

அமைதிவழி கவனவீர்ப்பில் ஈடுபட்டோர் ‘நாங்கள் கல்வி கற்க பாதுகாப்பான சூழலை உறுதி செய்யுங்கள்!’, ‘இடைநிறுத்தப்பட்ட கட்டடத்தை மீளத்தாருங்கள்!’, ‘அரசே! இடைநிறுத்தப்பட்ட வகுப்பறை கட்டடத்தை உடனடியாக ஆரம்பி!’, ‘அனர்த்தம் வரும் முன்னர் காத்திராமல் அதற்கு முன்னர் தீர்வு தாருங்கள்!’ உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

மூதூர் மத்திய கல்லூரியில் காணப்படும் ஒரு கட்டடம் கடந்த வாரம் இடிந்து வீழ்ந்துள்ளது. இன்னும் இரண்டு கட்டிடங்கள் இடிந்து விழும் அபாயத்தில் காணப்படுகின்றன். இதன் காரணமாக 14 வகுப்பு மாணவர்கள் மர நிழலில் இருந்து கல்வி கற்று வருகின்றனர்.

இந்நிலையில் முன்னைய அரசாங்கத்தால் மூதூர் மத்திய கல்லூரி புதிய கட்டடத்திற்காக 120 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்ட நிலையில் தற்போதைய அரசாங்கத்தால் இவ் வேலைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இந்த அரசாங்கம் புதிய கட்டடத்திற்கான வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் பெற்றோர் கோரிக்கை விடுத்தனர்.

அத்தோடு கவனவீர்ப்பு நிறைவடைந்த பின்னர் அவ்விடத்திற்கு தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன, மூதூர் வலயக் கல்வி பணிப்பாளர் ஆகியோர் வருகை தந்து கவனவீர்ப்பில் ஈடுபட்ட பெற்றோரை சந்தித்து கலந்துரையாடினர். கட்டட நிலமைகளையும் பார்வையிட்டனர். அத்தோடு மூதூர் வலயக் கல்வி அலுவலக தொழில்நுட்ப அதிகாரிகளும் இவர்களோடு பிரசன்னமாகியிருந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கையில் –

கடந்த அரசாங்கம் மூதூர் மத்திய கல்லூரிக்கு கட்டடம் வழங்குவதாக கூறி ஏமாற்று வேலை செய்துள்ளது. முன்னாள் திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரோடு இது தொடர்பாக பேசினேன். கடந்த அரசாங்கத்தால் தேர்தலை அடிப்படையாகக் கொண்டு நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக கடிதம் மாத்திரமே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதே தவிர, நிதி ஒதுக்கப்படவில்லை. இதே போன்று பல சம்பவங்கள் பதிவாகியிருக்கிம்றன. நாளை நாடாளுமன்றம் கூட உள்ள நிலையில் இது தொடர்பாக சம்பந்தப் பட்டவர்களோடு பேசுவேன். – என அவர் குறிப்பிட்டார்.












# மூன்று தளங்களில் நடைபெறும் யுத்தம்



இதயச்சந்திரன்

ஈரான் - இஸ்ரேல் சண்டை ஆரம்பித்ததும் மசகு எண்ணெய் விலை ஐந்து வீதத்தனால் அதிகரித்துள்ளது.

யுத்தம் நான்காவது நாளாகத் தொடர்கிறது. இது தணிவதற்காக சாத்தியப்பாடுகள் தென்படவில்லை.

இந்திய - பாகிஸ்தான் போரை ஒரே தொலைபேசி அழைப்பில் நிறுத்திய டிரம்ப், இந்தப் போரை நிறுத்த விரும்பவில்லை.

இது இன்னும் ஒரு வாரத்திற்கு நீடித்தால் ஹோர் முஸ் கால்வாய் கருங்கடலாக மாறும்.

உலகப் பொருளாதாரத்தில், உக்ரேயின் - ரஷ்ய மோதலை விட பாரிய தாக்கத்தை இது ஏற்படுத்தும்.

கடுமையான வரி Tariff அச்சுறுத்தலை விடுத்த டிரம்ப், தற்போது இறங்கி வந்து பேசுகிறார்.

இந்த யுத்தமானது எவ்வாறான அரசியல் leverage ஐ அமெரிக்காவிற்கு கொடுக்குமென்று தெரியவில்லை.

ஈரான் அழிக்கப்பட்டால், அது எந்தவிதமான பலமான நிலையை அமெரிக்காவிற்கு வழங்கும் என்பதனை அமெரிக்க அரசியல் விற்பனர்கள் எதிர்பார்க்கிறார்கள்?

அமெரிக்காவின் பலவீனமான நிலையை கீழிறங்கும் டொலர் சுட்டெண்ணும், திறைசேரி முறியின் 10 வருட yield உம் , எகிறும் $36 ரில்லியன் மொத்தக் கடனும் சுட்டிக் காட்டுகின்றன.

உக்ரேயின் - ரஷ்ய யுத்தத்தில் உக்ரேனுக்கு ஆதரவளிப்பதாலோ, சீனவிற்கு எதிரான வர்த்தகப் போரில் உலகளாவிய Tariff (வர்த்தக வரி)ஐ விதிப் பதாலோ அல்லது இஸ்ரேல் - ஈரான் மோதலில் நிபந்தனையற்ற ஆதரவினை நெதன்யாகுவிற்கு வழங்குவதாலோ அமெரிக்காவின் வீழ்ச்சிப் பாதை மாறப் போவதில்லை.

இவை அனைத்தும் வீழ்ச்சியின் ஆழத்தை அதிகப்படுத்தும்.

இந்த மூன்று விவகாரங்களையும் சீனாவும் ரஷ்யாவும் கையாளும் விதமே வேறு.

உக்ரேனில் ரஷ்யாவும், Tariff இல் சீனாவும் நேரடியாக அமெரிக்காவுடன் மோதுகின்றன.

ஈரான் விடயத்தில் அது நடக்காது.

இந்த யுத்தத்தில் இவ்விருநாடுகளும் நேரடியாக ஈடுபட விரும்பா.

இதன் எதிர்விளைவாக உலகப் பொருளாதார பாதிப்புகள் விரிவடைந்தால், ரிஷிமூலர்களே இதை நிறுத்துவார்கள்.

பார்ப்போம்.











# மஸ்கெலியா - நோட்டன் பிரதான வீதிப் பக்கத்தில் சரிந்து விழும் அபாய நிலையில் கருப்பந்தைல மரம்

(மஸ்கெலியா நிருபர்)

மஸ்கெலியா - நோட்டன் பிரதான வீதியில் மவுஸ்சாகலை தோட்ட மவுஸ்சாகலை சந்திக்கு அருகில் பிரதான வீதி அருகில் மண் திட்டு பகுதியில் பாரிய கருப்பந்தைல மரம் ஒன்று உள்ளது. அந்த மரத்தின் அடியில் உள்ள மண் திட்டுகள் தூர்ந்து வருவதால் எந்த நேரத்திலும் அந்த மரம் சரிந்து விழும் அபாயம் உள்ளது.

தற்போது நிலவும் காலநிலை காரணமாக இம் மரம் சரிந்தால் வீதியில் செல்லும் வாகனங்கள் மற்றும் மக்கள் உயிர் சேதங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

சம்பந்தப்பட்ட நோர்வூட் பிரதேச செயலகம், நோர்வூட் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மஸ்கெலியா பிரதேச சபை, மவுஸ்சாகலை தோட்ட அதிகாரி ஆகிய தரப்பினர் முன் வந்து இந்த மரத்தை வெட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர் அப் பகுதியில் உள்ள அனைத்து மக்களும்.

# வீட்டின் தானியங்கி வாயிலில் சிக்கி வீட்டுப் பணியாளர் ஒருவர் உயிரிழப்பு

## பேருவளை பகுதியில் நேற்று சம்பவம்

பேருவளை பகுதியில் உள்ள தொழிலதிபரொவரின் வீட்டில் பணபுரிந்த ஒருவர் நேற்று வீட்டின் தானியங்கி வாயிலில் சிக்குண்டு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் பல ஆண்டுகளாக அந்த வீட்டில் பணி புரிந்து வந்தவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் வாயிலுக்குள் நுழைந்தபோது தானியங்கி வாயில் திடீரென கீழ் நோக்கி வந்ததாகக் கூறப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் பேருவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் கலாச்சார மண்டபம் அமைத்துத் தர மலேசியத் தூதரிடம் கோரிக்கை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் கலாச்சார மண்டபம் அமைத்துத் தருமாறு மலேசியத் தூதுவரிடம் கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு கடந்த வாரம் 13 ஆம் திகதி வருகை தந்த மலேசியத் தூதுவர் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது தூதுவரிடம் கையளித்த வேண்டுகை கடிதத்திலேயே இக்கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

இக் கோரிக்கை கடிதத்தில் யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் கலாச்சார மண்டபம் ஒன்று அமைத்து தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதோடு பல பள்ளிவாசல்கள் புனரமைப்பின்றிக் காணப்படுவதனால் அவற்றை அமைப்பதற்கான உதவிகளும் எழுத்தில் கோரப்பட்டுள்ளன.

# இன்றைய ராசி பலன்கள் - 17.06.2025




இன்று நீங்கள் எளிதான அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும். உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் தேவை. இனிமையான வார்த்தைகள் நல்ல பலனைத் தரும்.

இன்று புதிய பணி வாய்ப்புகளை இழக்கும் அதிர்ஷ்டமற்ற நிலை காணப்படும். இன்று ஏமாற்றமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இதனால் உங்கள் மன உறுதியை இழந்து விடாதீர்கள்.

உங்கள் துணையுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சூடான விவாதங்கள் ஏற்படலாம். இது மகிழ்ச்சியைக் குறைக்கும்.

இன்று பண வரவிற்கான வாய்ப்பு குறைவு. பண இழப்பு ஏற்படும் என்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.




இன்று உங்களிடம் தைரியமான உறுதியான அணுகுமுறை காணப்படும். உங்கள் இலக்குகளில் வளர்ச்சியும் வெற்றியும் அடைவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் செயல்திறனில் நல்ல தரத்தை பராமரிக்க இயலும்.

உங்கள் மகிழ்ச்சியான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை இணைந்து கொண்டாடுவீர்கள்.

அதிக பண வரவு காரணமாக உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையுடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். அவர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள். உங்கள் செயல்திறன் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்களுக்கு பாராட்டு கிடைக்கும்.

நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் சுமூகமான உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும். உங்களிடம் இன்று மன உறுதி காணப்படும்.




இன்று சவாலான சூழ்நிலைகள் காணப்படும். அதனால் வெறுமையை உணர்வீர்கள். உறுதியான போக்கை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் பிரச்சினைகளை சமாளிக்க முடியும்.

உங்கள் கடின உழைப்புக்குத் தகுந்த பலன்கள் கிடைக்காது. இதற்குஉங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடாததே காரணம்.

உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். இதனை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள். இன்று லாபம் நஷ்டம் இரண்டும் சேர்ந்து காணப்படும். பணப்புழக்கம் குறைவாக காணப்படும். பண இழப்புகளை தவிர்க்க நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.




இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும்.. ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் இந்தச் சூழலைத் திறமையாகக் கையாள முடியும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பயனுள்ள யுத்திகளைக் கையாண்டு கவனமாக பணியாற்றினால் பணிகள் சுமூகமாக நடக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. இதனால் உறவின் நல்லிணக்கத்தைக் கெடுக்கும் கவனமற்ற வார்த்தைகளை தவிர்க்கலாம்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளி சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று நீங்கள் சிறந்த மன ஆற்றலுடனும் காடுப்பட்டுடனும் காணப்படும் சிறந்த நாள். இன்று பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் அமைதி பெறுவீர்கள்.

இன்று பணிகளை குறித்த நேரத்தில் முடிக்கும் சூழல் காணப்படும். பணிகளை விரும்பி எளிதாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரிடையேயும் பரபஸ்பர மதிப்பு உயரும்.

பணப்புழக்கம் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்தை உணர்வீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையுடன் இருந்தால் உங்கள் இலக்குகளில் வெற்றி அடையலாம். பதற்றம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்தி நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில தடைகள் காணப்படும். உறுதியுடன் இருந்தால் தடைகளை சமாளித்து சிறப்பாக செயலாற்றலாம்.

தகவல் பரிமாற்ற பிரச்சினையும் கருத்து வேறுபாடும் காணப்படும். அமைதியாக இருப்பது மிகவும் உதவிகரமாக இருக்கும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்காது. இந்து கூடுதல் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. வயிற்று உபாதை காரணமாக அவதிப்பட நேரலாம்.




அமைதியாக இருப்பதன் மூலம் முறையான முடிவுகளை எடுக்க இயலும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் பதற்றமின்றி சமநிலையில் இருக்கலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணியில் தவறுகள் நேரலாம். எனினும் கவனமாகப் பணியாற்றினால் இன்று சிறப்பாக இருக்கும்.

இன்று உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை பராமரிப்பது நல்லது. இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிகரிக்கும் பொறுப்புகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 17.06.2025




இன்று பதற்றமும் கவனமின்மையும் காணப்படும். இதனை சமாளிக்க அமைதியை மேற்கொள்ள வேண்டும். இன்று சகஜமான அணுகுமுறையுடன் உங்கள் பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடத்தில் பதற்றம் காரணமாக தாமதமாக பணிகள் நடைபெறும். பணிகளைக் கையாளும் போது பொறுமையான அணுகுமுறை தேவை.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதும் நட்பான அணுகுமுறை கொள்வதும் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்க உதவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும் . அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

அதிக பதற்றம் காரணமாக தலைவலி ஏற்படலாம். இறை வழிபாடும் பிரார்த்தனையும் மேற்கொள்வது சிறந்தது.




உங்கள் மன உறுதி காரணமாக நீங்கள் வெற்றி பெறலாம். இன்று சிறந்த முன்னேற்றம் கண்டு மகிழ் வீர்கள்.

உங்கள் திறமைகள் வெளிப்படும். அது உங்கள் செயல்திறனில் பிரதி பலிக்கும். உங்கள் சக பணியாளர்களுக்கு நீங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருப்பீர்கள்.

இனிமையான வார்த்தைகளும் நல்ல புரிந்துணர்வும் உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றல் காணப்படும்.




இன்று ஸ்திரமான. இலக்குகளை வெல்லக்கூடிய இனிமையான தரு ணங்களை சந்திக்கும் நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். புதிய பணி வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பதன் மூலம் நல்லுறவு வளரும். இருவரிடையே பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படும்.

பண வரவு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் கடின உழைப்பின் காரணமாக நீங்கள் ஊக்கத்தொகை வகையில் பணம் பெறுவீர்கள்.




இன்றைய நாள் உங்கள் எதிர் பார்ப்பின் படி இருக்காது. எதிர் மறையான பலன்கள் ஏமாற்றத்தை தரும். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு தடவை யோசிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களையும் பாதுகாப்பின்மை உணர்வையும் தவிர்த்தல் வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சிறந்த புரிந்துணர்வை பராமரிக்க இயலாது. உங்களின் எரிச்சல் உணர்வை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.



# போதைப் பொருள்களுடன் நால்வர் சுன்னாகம் பொலிஸாரினால் கைது

50 கிராம் ஹெரோயின், 1000 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள், 5 கிராம் கஞ்சா மற்றும் நான்கு போதை மாத்திரைகளுடன் நால்வரை சுன் னாகம் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

வடமாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் திலக் தனபால, யாழ் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் காளிங்க ஜெயசிங்க, யாழ் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயமகா, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டில்றுக் ஆகியோரின் வழிகாட்டுதலுக்கமைவாக சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ராமநாயக்க மற்றும் சுன்னாகம் குற்றத்தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி கலுமினால் ஆகி யோரினால் முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்புக்களின் பிரகாரம் இந்தக் கைது நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டன.

இதன்படி 1000 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் 50 கிராம் ஹெரோயினுடன் 25 வயதான இளை ஞர் ஒருவரும், 4 போதை மாத் திரைகளுடன் இரண்டு இளைஞர்களும், 5 கிராம் கஞ்சாவுடன் ஒருவரும் என நால்வரைப் பொலிஸார் கைது செய்தனர் .

கைது செய்யப்பட்ட நால்வருக்கும் எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளைத் தாங்கள் மேற்கொண்டு வருகின்றனர் என பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.